## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் விதிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்மானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 1,658,383 ஆக இருந்த போதும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 1,640,595 ஆகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நடைமுறை அல்லாத பொறுப்புகள் ரூபா 17,788 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது நன்கொடையாகப் பெறப்பட்ட பொருட்களைப் பெறுமதியிட்டு அவற்றைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கட்டிடங்களது பெறுமதியை அவற்றுடன் தொடர்புடைய பட்டோலையுடன் இணக்கம் செய்கையில் ரூபா 413,544 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 2,966 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே, அலுவலக உபகரணங்களது பெறுமதியை சொத்துப் பதிவேட்டுடன் இணக்கஞ் செய்கையில் ரூபா 8,266 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 5,044 ஆல் அதிகரித்துமிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

நிறுவகத்தினால் ரூபா 25,000 பெறுமதியான 2500 நாட்காட்டிகளை அச்சிட்டிருந்தது. இந் நாட்காட்டிகள் களஞ்சியத்தில் பெறப்பட்டதாக பொருட் பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த போதும் அவை விநியோகிக்கப்பட்டதற்கான சான்று சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகளது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூபா 2,000,000 ஆகும். இதில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த கடன் தவணைப் பணமாகிய ரூபா 136,090 அறவிடப்படாதிருந்தது.

(ஆ) கிராமிய முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவகத்தினால் 2012 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கிய கடன் உடன்படிக்கைப் பிரகாரம் 2014 நவம்பர் இறுதிவரையில் முற்றாகச் செலுத்தப்பட வேண்டிய 9 விவசாயிகளது ரூபா 217,153 கூட்டுத்தொகையானது கணக்காய்வுத் தினம் வரை அறவிடப்படாதிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பல்கலைகழகங்களுக்கான தாபன விதிக் கோவையினது இரண்டாவது பகுதியின் XXVI அத்தியாயத்தின் 2.7 ஆம் பந்தி | கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பரிசாகவோ படியாகவோ பெறப்படும் சகல சொத்துக்களும் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதென பொருட் கணிப்புச் சபை திருப்தி அடைய வேண்டும். எனினும், 2014 ஆகஸ்ட் 26 அன்று தேசிய தொலைக்கல்விச் சேவை நிலையத்திலிருந்து பெறப்பட்ட பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது கையிருப்பு கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1979 நவம்பர் 13 ஆந் திகதிய 48(4) ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு முறையாகத் தயாரிக்கப்படவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 2,789,001 பற்றாக்குறை ஆக இருந்ததுடன் இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,301,901 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகள் ரூபா 9,090,902 வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இவ்வீழ்ச்சி தொடர்பில் ஊழியர் நிர்வாகச் செலவினம் ரூபா 4,108,690 ஆலும் பிரயாணச் செலவினம் ரூபா 1,507,153 அதிகரித்தமையே பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயாற்றல்

கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முதலாவது கற்கை நெறியை ஆரம்பித்திருந்தது. நிறுவகம் அந்த 5 ஆண்டு கற்கை நெறியின் பொருட்டு பட்டப்படிப்புக்கான பாட விதானங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எனினும், கணக்காய்வுத் தினமான 2015 ஜுலை 03 ஆந் திகதியளவில் கற்கை நெறி ஆரம்பமாகி ஏறக்குறைய 6 ஆண்டுகளும் 6 மாதங்களும் முடிவடைந்திருந்த போதும், இறுதிக் கட்டமான ஆராய்ச்சிக்கான கட்டுரையை எழுதுதற்கான வேலையை ஆரம்பித்திருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிப்பொறுப்பு ஒப்படைப்பிலான அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 36 ஊழியர்களுள் 11 பேர் 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களாக இருந்தனர். சேவைக்காலம் ஆண்டுதோறும் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாழைக் கன்று உற்பத்தியில் நேரடியாக ஈடுபடும் ஆய்வு கூடம் மற்றும் பச்சை இல்லங்களிலும் (Green Houses) உள்ள சகல ஊழியர்களையும் செயற்பாடு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினையும் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2014 ஒக்டோபர் மாதத்தில் ரூபா 75,000 மாதாந்தப் படி அடிப்படையில் செயற்திட்ட முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நியமனத்திற்குரிய கடமைகளைப் பூர்த்தி செய்திராதபோதும் செயற்திட்ட முகாமைத்துவப் படியாக ரூபா 225,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

நிறுவகம் 2011 முதல் 2014 வரை கொள்வனவு செய்த ரூபா 81,679 பெறுமதியான கையிருப்பு காலாவதியாகி இருந்தமை 2015 ஜுலை 03 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அக்கையிருப்பு மெதுவாக நகரும் கையிருப்பாதலால் தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டதாலேயே அக் கையிருப்பு காலாவதியாகியிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான 1947 சதுர அடிக் கட்டிடத்தில் 1157 சதுர அடி அளவில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரசாங்கத்தால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட மூலதன மானியத்தில் ரூபா 25,423,370 குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாது நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தின் நோக்கத்திற்கு முரணாக மீளாய்வாண்டின்போது புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கு ரூபா 63,867 செலவிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயனுள்ளவாறு பயன்படுத்துவதற்கும் வழிகாட்டியாக இருக்கும் விதத்திலும் மீளாய்வாண்டிற்கு முன்னரே கூட்டினைந்த திட்டத்தைத் தயாரித்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமெனினும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

நிதி மற்றும் செயற்பாட்டுச் செயலாற்றலுக்கான பொறுப்புகளை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கும் விதத்தில் மீளாய்வாண்டிற்கு முன்னரே செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்காததுடன், 2014 ஆம் ஆண்டின்போது எய்துவதற்கு / நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த சாதனைகளையும் இலககுகளையும் அவற்றினது நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றத்தையும் கணக்காய்வில் பரீசிலிக்க முடியாதிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) முற்பணக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு